முருகப்பெருமான் துணை

**மகான் அதிபத்த நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.06.2022**, புதன்கிழமை

1. ஞானபண்டிதன் சூட்சுமமே
ஞானியாக வரம் பெற்றுவந்த
ஞான தேசிகனே உந்தனுக்கு
நாட்டிடுவோம் அருளாசி தன்னை
2. தன்னையே சித்தர்களை தொடர்ந்து
தக்கபடி அறுபத்து மூன்று நாயன் மார்களும்
நன்னயமாய் தொடர்ந்துரைப்போம்
நாட்டிட சுபகிருது மிதுனதிங்கள்
3. திங்களிலே அட்டம திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 08 நாள், 22.06.2022 புதன்கிழமை)
தேசிகனுக்கு அதிபத்த நாயனாரும்
இங்கனமே ஓங்கார உலகம் தானும்
இனிதே அமைய உரைப்பேன்
4. உரைக்கவே அன்னதானமெனும்
உயர்வான அறநெறிகொண்டு
குறைவிலா சைவ நெறிபோதிக்கும்
குருவரங்கன் ஞானம் ஏற்றிட
5. ஏற்றிட நன்மைகள் பெருகும்
எல்லா வகையும் மாற்றம்
ஆற்றலாக உலகு காணும்
அமைதி கொண்ட ஞானபூமியாக
6. ஆகவே மாற்றம் தன்னை
அரங்கன் நெறியே தரும்
வகைபட சமூக மாற்றம்
வள்ளல் நெறி கொண்டே
7. கொண்டே அரங்கன் படைக்க
குருவருளாக வரம் கேட்டு
தொண்டு செய்து மக்கள் வர
தேசிகன் வழி யாவும் கிட்டும்
8. கிட்டவே அரங்கன் தரும்
குறைவிலா ஞான பலம்
கட்டம் போக்கி வளம் தரும்
கருணை கூட்டி தயவு தரும்
9. தருமசிந்தை தனித்துவ மிக்க
தன்னார்வ சேவை நோக்கும்
பெருமளவில் உருவாக்கி இனிதே
பேராசான் துணை கூட்டும்

10. கூட்டவே தீவினை விலகி
குறைவிலா நல்வினை பெருகும்
வாட்டம் போக்கி மனபலம்
வள்ளல் தன்மை கொண்ட

11. கொண்ட புண்ணியத் தன்மைகூட்டி
குருவருள் பூரணம் கொண்ட
தொண்டனாக கடைத்தேற்றும்
தெரிவித்த அருளாசி முற்றே

—சுபம்—